# PERTUBUHAN HINDHUDHARMA MALAYSIA
# மலேசிய இந்துதர்ம மாமன்றம்
# MALAYSIA HINDHUDHARMA MAMANDRAM

(3212/82-Sel)


3 ஜனவரி 2012

**மலேசிய இந்துதர்ம மாமன்ற தேசியத் தலைவரின் செய்தி**

திருச்சிற்றம்பலம். மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் 2012-ஆம் ஆண்டிற்கான அருள் நிலைய, மாநிலப் பேரவை மற்றும் தேசியப் பேரவைக் கூட்டங்களின் வழி அனைவரையும் சந்திப்பதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பை எண்ணி பெருமகிழ்வடைகிறேன். எல்லாம் வல்ல முருகப் பெருமான் அனைவருக்கும் அருள் பாலித்திடவும் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்று நல்லாரோக்கியத்துடன் வாழ்ந்திடவும் பிராத்திக்கின்றேன். மாமன்றப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

மாமன்ற நிர்வாக அமைப்பு முறையில் மிக முக்கியப் கூறாக அமைந்துள்ள இந்த ஆண்டுக் கூட்டங்கள் மிக முக்கியமானவை. மாமன்ற கொள்கை மற்றும் நோக்கங்களுக்கு ஏற்ப நிர்வாகம் முடிந்த ஆண்டில் நடத்தப்பட்டதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் வரும் ஆண்டிற்கு திட்டம் தீட்டுவதற்கும் இக்கூட்டங்கள் வழி வகுக்கின்றன. மேலும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லவும் இக்கூட்டங்கள் வாய்ப்பளிக்கின்றன. மாமன்றத்தின் மிக முக்கியச் சொத்து மாமன்ற உறுப்பினர்களே என்பதை இது மீண்டும் உறுதிப் படுத்துகிறது.

மலேசிய இந்துதர்ம மாமன்றம் கடந்த 30 ஆண்டுகளாக இந்நாட்டு இந்துக்களுக்கு தொண்டாற்றி வருகிறது. மாமன்றம் எனும் இப்பேரியக்கம் இந்துப் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும் அங்கீகரிக்கப் பட்டதற்கும் முக்கியக் காரணங்கள் மாமன்றம் ஆன்மீக வளர்ச்சிக்கும் மாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் குடும்ப உணர்வுக்கும் வழங்கும் முக்கியத்துவமுமாகும். இவை இரண்டும் தொடர்ந்து பாதுகாக்கப் படுவதோடு மேலும் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

இவ்வாண்டு 30-ஆம் நிறைவினைக் நாம் கொண்டாட விருக்கிறோம். இவ்வேளையில் மாமன்றத்தின் எதிர்காலத்திற்குத் திட்டமிடுவது காலத்தின் கட்டாயமாகும். எல்லா பொது இயக்கங்கள் போலவே மாமன்றமும் பல்வேறு சவால்களை எதிர்நோக்குவதை தவிர்க்க முடியாது. இச்சவால்களையும் வரவிருக்கின்ற புதிய சவால்களையும் எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

நாம் நம் தன்னலமற்ற தொண்டினை மிகச் சிறப்பாகவும் இன்னும் அதிக அளவிலும் ஆற்றிட எல்லாம் வல்ல முருகப் பெருமான் நமக்கு புதுத் தெம்பையும் புதிய கடப்பாட்டையும் வழங்கிட பிராத்திக்கின்றேன்.

**“மாமன்றத்தின் வழி இந்து தர்மத்திற்குத் தொண்டு செய்வோம்”**

அன்புடன்,

**(பேராசிரியர் முனைவர் என்.எஸ்.இராஜேந்திரன்)**
தேசியத் தலைவர்
மலேசிய இந்துதர்ம மாமன்றம்